Volume 1 Issue 2 February 2020 E-ISSN: 2582-2063

# விடுதலைப் போராட்டத்தில் கோபால நாயக்கரின் பங்கு

**சி. ரோஹுகா தேவி**
*உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறை*
*சீதாலெட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி, பள்ளத்தூர், இந்தியா*

## முன்னுரை

மதுரை நாயக்க மன்னர்களுக்குக் கட்டுப்பட்ட சிற்றரசர்களாக கப்பத் தொகையினை செலுத்திவந்த பாளையக்காரர்கள் மற்றும் மறவர்கள், மதுரை நாயக்க மன்னர்களின் மறைவிற்குப் பிறகு கப்பம் கட்ட மறுத்தனர். எனவே ஆற்காடு, மதுரை உள்ளிட்ட அரசுகள் நவாப்பின் ஆட்சிக்குட்பட்ட போது கிட்டத்தட்ட கப்பம் செலுத்த மறுத்தனர். இதனால் ஏற்பட்ட கிளர்ச்சியை அடக்க நவாப்புக்குப் படை உதவி செய்த ஆங்கிலேயருக்கு நவாப் கட்டணம் செலுத்த வேண்டியிருந்தது. இது பெரும் கடன் தொகையாக மாறவே இப்பகுதியில் எல்லாம் வரி வசூல் செய்யும் உரிமையை கம்பெனியார் பெற்றனர்.

## தமிழ்நாட்டின் புரட்சிக் குழுக்கள்

தமிழகத்தில் அமைதியின்மை உருவாகிவிட்டதை அறிந்த மைசூரின் திப்புசுல்தானும் பிரான்சு நாட்டு நிர்வாகக் குழுவினரும் இரகசியமாகத் தூதர்களை அனுப்பிவைத்தனர். இதன் விளைவாக விருப்பாச்சி கோபால நாயக்கர் தலைமையில் பழனியிலும், மருதுபாண்டியர் தலைமையில் சிவகங்கையிலும், மயிலப்பன் தலைமையில் இராமநாதபுரத்திலும், சிவகிரியின் மாப்பிள்ளை வன்னியன் மற்றும் பாஞ்சாலங்குறிச்சியன் வீரபாண்டிய கட்டபொம்மன் ஆகியோர் தலைமையில் திருநெல்வேலியிலும் குழுக்கள் தோற்றுவிக்கப்பட்டன. இதே நேரம் தென்னிந்தியாவின் பிற பகுதிகளிலும் இத்தகைய புரட்சிக் குழுக்கள் தோன்றின. குறிப்பாக மலபாரில் கேரள வர்மா, கன்னட தேசத்தில் விட்டலஹெக்டே, அரிசிக்கரையில் கிருஷ்ணப்ப நாயக்கர், பெல்ஹாமில் துாந்தாஜி வாக் ஆகியோர் தலைமையில் குழுக்கள் உருவாயின.

## கோபால நாயக்கரின் தொடக்ககால எதிர்ப்புகள்

பல போர்க்களங்களைச் சந்தித்த வீரன் கோபால நாயக்கர், விருப்பாட்சியின் பாளையக்காரனாக விளங்கியவன். கி.பி. 1792-ல் திண்டுகல்லை ஆங்கிலேயர் வென்றபின்னர் ஆங்கிலேயரின் மேலாதிக்கத்துக்குட்பட்டார். 1792ம் ஆண்டு ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனி விருப்பாச்சியன் நிர்வாகத்தினை முறைப்படி ஏற்றுக்கொண்டதாக அறிவித்து, மாவட்ட ஆட்சியர் (கலெக்டர்) நியமிக்கப்ட்டு திண்டுக்கல் பகுதியானது நிர்வகிக்கப்பட்டது. மேலும் முன்பு வழங்கிய அதே வரியானது ஆங்லேயருக்கும் வழங்கப்பட்ட வேண்டும் என கட்டளையிட்டனர். இதனை கன்னிவாடி, பழநி மற்றும் பிற பாளையங்களில் சிலர் எற்றுக்கொண்டனர். முதன்முறையாக ஆங்கிலேயரின் இந்நடவடிக்கைக்கு தனது கண்டனத்தினையும் எதிர்ப்பையும் கோபால நாயக்கர் வெளிப்படுத்தினார்.

## ஹனுமந்தங்குடியை கைப்பற்றுதல்

ஹனமந்தங்குடி பாளையம் பழநிக்கும், ஆயக்குடிக்கும் அருகில் உள்ள சிறிய பாளையம் ஆகும். இது விருப்பாச்சிக்கு மிக அருகில் இருந்தது. மேலும் மண்கோட்டையால் பாதுகாக்கப்பட்ட இப்பாளையத்தினை 1792ம் ஆண்டு கோபால நாயக்கர் கைப்பற்றி தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்தார். விருப்பாச்சியின் பிரதம அமைச்சரான முத்துவீரப்ப சேர்வைக்காரரின் தலைமையில் நடைபெற்ற இத்தாக்குதல் கோபால நாயக்கரின் அரசியல் ராஜதந்திரங்களின் ஒன்றாகவும் கருதப்படுகின்றது. இதில் குறிப்பிடப்பட வேண்டிய ஒன்று ஹனுமந்தங்குடி பாளையம் ஆங்கிலேயரின் கட்டுகப்பாட்டின் கீழ் இருந்த பகுதியாகும்.

**கோபால நாயக்கரின் பிற தாக்குதல்கள்**

கோபால நாய்க்கர் தொடர்ந்து ஆங்கிலேயருக்கு தொந்தரவு கொடுத்த வண்ணம் இருந்தனர். 1973ம் ஆண்டு விருப்பாச்சி அருகில் இருந்த போதிபுரத்தின் மீது உரிமை கோரினார் கோபால நாயக்கர். இதனை சட்டவிரோத செயல் என கண்டித்த திண்டுக்கல் கலெக்டர் கோபால நாயக்கரை மிகக் கடுமையாக எச்சரித்து கடிதம் அனுப்பினார். ஆனால் இவற்றையெல்லாம் பொருட்படுத்தாத கோபால நாயக்கர் 1793-1794 வரை மதுரை மாகாணத்திற்குட்பட்ட ராமகிரி மற்றும் பிற பாளையங்களின் மீது தாக்குதல் நடத்தினார். ராமகிரியை தன்னுடைய ஆட்சிப் பகுதியுடன் இணைத்துக் கொண்டார்.

**கன்னிவாடியை உரிமைகோருதல்**

1794ம் ஆண்டு திண்டுக்கல் கலெக்டர் மெக்லட் விடுப்பு எடுத்துச் சென்ற காரணத்தினால் ஜான் வாராங்கம் கலெக்டராக நியமிக்கப்பட்டார். அதே ஆண்டு அவர் மாற்றப்பட்டு அப்பதவிக்கு ஜார்ஜ் விஞ்ச் நியமிக்கப்பட்டார். அரசியல் ஸ்திரமற்ற சூழ்நிலையைப் பயன்படுத்திக் கொண்டு பல பாளையக்காரர்களும் அத்துமீறிய செயல்களில் ஈடுப்பட்டனர். இக்காலக்கட்டத்தில் கன்னிவாடியை ஆட்சி செய்த நரசிம்ம நாயக்கர் 1793ம் ஆண்டு இறந்தார். ஆனால் இப்பாளையத்தின் மீது மூன்று பேர் உரிமை கோரி திண்டுக்கல் கலெக்டருக்கு கடிதம் எழுதினர் முதலாவதாக நரசிம்ம நாயக்கரின் முதல் மனைவியும், இரண்டாவதாக நரசிம்ம நாயக்கிரின் இரண்டாவது மனைவியின் மூத்த மகனும், மூன்றாவதாக கோபால நாயக்கரும் உரிமை கோரினர். இதில் கோபால நாயக்கர் கன்னிவாடி தனது பாளையத்திற்கு மிக அருகில் அமைந்துள்ளது என்ற அடிப்படையிலும் அப்பைய நாயக்கர் தோட்டியர் இல்லை எனவும் நரசிம்ம நாயக்கரின் உறவினரான தனக்கு கன்னிவாடியை அளிக்க வேண்டும் எனவும் கோரியிருந்தார். இக்கோரிக்கையை கூர்ந்து கவனித்த திண்டுக்கல் ஆட்சியர் இதனை ஆய்வு செய்து பரிந்துரை வழங்குமாறு வருவாய் வாரியத்தின் உதவியை நாடினார். இப்பிரச்சனைகளை நன்கு ஆய்வு செய்த வருவாய் வாரியம் கோபால நாயக்கரின் கோரிக்கையை வன்மையாக கண்டித்தது மேலும் நரசிம்ம நாய்கரின் முதல் மனைவி மற்றும் மகனின் கோரிக்கைளையும நிராகிரித்ததுடன் அப்பைய நாயக்கரே கன்னிவாடியின் பாளையக்காரராகத் தொடரவும் உத்தரவிட்டது. இந்நிகழ்விற்குப் பின் கோபால நாயக்கர் ஆங்கிலேயரின் முதன்மை எதிரியாக மாறினார்.

**ஆயக்குடி பாளையத்தாக்குதல்**

1795ம் ஆண்டு திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் ஒரு அறிவிப்பை வெளியிட்டார். அதன்படி சமபந்தி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெறுவதாகவும் இதனைப் பயன்படுத்திக் கொண்ட கோபால நாயக்கர், ஆயக்குடி பாளையத்தின் கௌதம நாயக்கர் தொடர்ந்து விருப்பாச்சி பாளையத்தின் எல்லைப்புறங்களில் தாக்குதல் நடத்துவதாகவும் ஆக்கிரமிப்புகள் செய்துள்ளதாகவும் புகார் அளித்தார். இதுகுறித்து ஆய்வு செய்த கலெக்டர். எல்லைப்புற தாக்குதல் மற்றும் அத்துமீறல்களை உறுதி செய்தார். மேலும் விருப்பாச்சி பாளையத்தின் முந்தைய எல்லைகளையும் ஆட்சி பகுதிகளையும் மீண்டும் திண்டுக்கல் கலெக்டர் உறுதி செய்து கோபால நாயக்கருக்கு அளித்தார்.

**கோபால நாயக்கரின் புரட்சி**

18ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பல பாளையக்காரர்கள் வரி செலுத்த மறுத்த கலகத்தில் ஈடுப்பட்டனர். அவ்வாறு கலகம் செய்தவர்களில் லுசிக்ய நாயக்கரும் ஒருவர் ஆவார். இவர் குமாரவாடி பாளையத்தின் ஆட்சியாளராக இருந்தார். இவருக்கு ஆதரவாக கோபால நாயக்கரும் கன்னிவாடி அம்மையாக்கனூர், மணப்பாறை, ராமகிரி மற்றும் நத்தம் ஆகிய பாளையங்களைச் சார்ந்த நிர்வாகிகளும் லுசிக்கிய நாயக்கரை ஆதரித்தனர், மேலும் இவர்கள் அனைவரும் இணைந்து கூட்டினைவினை ஏற்படுத்திக்கொண்டனர். அதன்படி

ஒருவருக்கு ஒருவர் உதவிசெய்வது எனவும் ஆங்கிலேயரை தங்கள் நாட்டிலிருந்து அகற்றவும் உறுதிபூண்டனர்.

**எறக்கோட்டை தாக்குதல்**

விருப்பாச்சி, குமாரவாடி மற்றும் சில பாளையங்கள் ஒப்பந்தத்தின் படி ஆங்கிலேயருக்கு எதிராக செயல்பட்டன மேலும் கம்பெனிக்கு எதிராக தங்களது நடவடிக்கைகளையும் தீவிரப்படுத்தினர். ஆனால் எறக்கோட்டை பாளையம் கம்பெனிக்கு ஆதரவாக இருந்ததாகக் கூறி அதனை தாக்க திட்டமிட்டார் கோபால நாயக்கர். அவருக்கு உதவியாக நத்தம், ராமகிரி மற்றும் கடவூர் ஆகிய பாளையங்களைக் சேர்ந்தவர்கள் படையுதவி அளித்தனர். கலெக்டர் மேஜர் லிண்டாசி நிலைமையை சமாளிக்க தாசில்தாரை அனுப்பி வைத்தார். கோபால நாயக்கர் இந்தாக்குதலின் போது கிழ்கண்டவாறு தனது படைவீரர்களிடம் முழங்கினார்.

“நான் இக்கோட்டையை கைப்பற்றும்வரை ஓயமாட்டேன் விருப்பாச்சியின் ஒவ்வொரு ஆணும் இக்கோட்டையை கைப்பற்ற பாடுபட வேண்டும்” என்று தனது முதல் முயற்சியில் நான்கு பாளையக்காரர்களுடன் இணைந்து எறக்கோட்டையைத் தாக்கினார். இத்தாக்குதலில் வெற்றி வாய்ப்பை இழந்த கோபால நாயக்கர் மீண்டும் கூட்டனியை உறுதிசெய்து. மேலும் சுல்தானின் உதவியையும் பெற்று எறக்கோட்டையைக் கைப்பற்றினார். இது ஆங்கிலேய கிழக்கிந்திய கம்பெனிக்கு பெரும் பின்னடைவை எற்படுத்தியது.

**திண்டுக்கல் கூட்டிணைவின் தோற்றம்**

அந்திய ஆதிக்கத்திற்கு எதிரான விடுதலைப்போராட்ட வரலாற்றில் நீண்ட நெடிய பங்கு கோபால நாயக்கரையே சாரும். சிவகங்கை, ராமநாதபுரம் மற்றும் மதுரை அரசுகள் கோபால நாயக்கரை முழுமையாக ஆதரித்தன. மேலும் ஆங்கிலேயருக்கு எதிரான தனது போராட்டத்திற்கான ஆதரவினை பெற திண்டுக்கல்லின் ஆட்சியர் மணப்பாறை, கள்ளர்நாடு, கோயமுத்தூர் மற்றும் சேலம் ஆட்சியாளர்களுக்கும் தனது தூதுவரை அனுப்பி ஆதரவினை கோரினார். 1797ம் ஆண்டின் தொடக்கம் முதல் கோபால நாயக்கர் மணப்பாறையின் ஆட்சியாளரான லெட்சுமி நாயக்கருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தார். அவரது இந்த முயற்சி திண்டுக்கல்லில் ஒரு கூட்டமைப்பினை ஆங்கிலேயருக்கு எதிராக உருவாக்கியது.

1797ம் ஆண்டு மேலும் பல பாளையக்காரர்களுக்கும் இக்கூட்டினைவில் சேர அழைப்பு விடுத்தார் கோபால நாயக்கர், அவரது இம்முயற்சியைப் பாராட்டிய பல குறுநில மன்னர்களும் கோபால நாயக்கருக்கு தங்கள் ஆதரவினை வெளிப்படையாகவே அளித்தனர். கோபால நாயக்கர் தனது தூதுவர்களாக தோமாச்சி முதலியாரையும், பூசாரி நாயக்கரையும் திப்புவின் அரசவைக்கு அவருடைய வக்கீல் கோபி ரெட்டியுடன் அனுப்பிவைத்தார்.

ஆங்கிலேயர் ஆட்சியிலிருக்கும் பகுதிகளை மீட்க அடுத்தடுத்துத் திட்டமிட்டனர் 05.03.1799 ல் நான்காம் மைசூர்ப் போர் துவங்கியது. இப்போர் புரட்சிக்காரர்களுக்குப் பெரும் வாய்ப்பாக அமைந்தது. போர் அபாயத்தில் சிக்கிய கம்பெனியார் பாளையக்காரர்களின் துணையை நாடினர். கோபால நாயக்கரும் அவன் கூட்டினரும் உதவ மறுத்ததுமின்றி ஆங்கிலேயர்களின் முகாம்களைத் தாக்கிச் சூறையாடினர். கோபால நாயக்கர் சிவகங்கை மருதுபாண்டியருடன் கன்னட தேசத்துத் தவைர் தூண்டாசியுடனும் தொடர்பு கொண்டு தென்னகக் கூட்டிணைவுகளை ஒரு விரிவான கூட்டமைப்பாக மாற்றினார்.

**முதல் போர்**

கி.பி. 1799 மார்ச்மாதம் கோபால நாயக்கர் வழிகாட்டலின்படி மணப்பாறை லட்சுமி நாயக்கர், ஸ்ரீரங்கத்தில் திப்புசுல்தானை சந்தித்து உதவி கேட்டனர். திப்புசுல்தான் தனது தளபதி ஹாஜிகானை நியமித்து ஆங்கிலேயரை எதிர்த்து நத்தம், மேலூர், மணப்பாறை ஆகிய பகுதிகளை கைப்பற்றினர்.

**ஆங்கிலேயர் எச்சரிக்கை**

கி.பி 1799 அக்டோபரில் கட்டபொம்மனைத் தூக்கிலிடப்பட்ட பின் விருப்பாச்சி அரண்மனைக்கு மெஜர் ஐ.ஏ.பானர்மேன் எச்சரிக்கை செப்புப்பட்டயம் ஒன்றை அனுப்பினார். அதில் கம்பனியருக்கு எதிராக புரட்சியில் ஈடுபட்டால் கட்டபொம்மனைப் போல தூக்கிலிட்டு கொள்ளப்படும் என்ற செய்தி இருந்தது. தற்போது இடையகோட்டை ஜமீன் அரண்மனையில் இச்செப்புப் பட்டயம் உள்ளது.

**தூந்தாஜி வாக்கின் ஆதரவு நடவடிக்கைகள்**

சூழ்நிலை பாதகமாக இருந்தாலும் திருநெல்வேலியிலும், மைசூரிலும் எஞ்சியிருந்த புரட்சியணியினர் சிவகங்கைக் காடுகளுக்கும், பழனி காடுகளுக்கும் வந்து சேர்ந்தனர். அடர்ந்த காடுகள் தந்த பாதுகாப்பின் காரணமாக புரட்சிக்கான சூழ்நிலை மீண்டும் உருவாகத் தொடங்கியது விருப்பாச்சி கோபால நாயக்கர், மருது பாண்டியர் ஆகியோரின் ஊக்கத்தால் புரட்சியாளர்கள் விடுதலை பெறவேண்டுமென்று தங்களது தீர்மானத்தினை செயல்படுத்துவதற்காக மீண்டும் இயக்கத்தினைக் கட்டமைத்தனர். கூட்டாளிகளின் ஆதரவின்றி இந்நோக்கம் எளிதில் நிறைவேற்ற இயலாது. எனவே தக்காணத்தில் தனக்கென ஓர் அரசை உருவாக்கிக்கொண்டு. இரு போருலககுளின் சக்கரவர்த்தி எனத் தம்மை அறிவித்துக்கொண்டு ஆங்கிலேயருடன் தொடர்ந்து போரிட்டு வந்த மராட்டியத் தலைவர் தூந்தாஜி வாக்கின் ஆதரவைப் பெற புரட்சியாளர்கள் முயன்றனர்.

ஈரோடு சின்னகவுண்டர், வெங்கடராமணய்யா, பரமத்தி அப்பாஜிக் கவுண்டர் ஆகியோர் தலைமையில் இரகசியமாக மூன்று தூதுக்குழுக்களைத் தனித்தனியாக அனுப்பினர். இவர்கள் காட்டுவழிகளில் பயணம் செய்து தூந்தாஜி வாக்கின் முகாமை அடைந்தனர். தமிழர்கள் புரட்சிக்கு ஆயுத்தமாக உள்ளனர் எனப் பலவிதங்களிலும் வலியுறுத்திக் கூறிய பின்னரே தூந்தாஜி வாக்கின் ஆதரவு குறித்த உறுதிமொழியைத் தூதுக் குழுவினரால் பெற முடிந்தது. புரட்சி நடவடிக்கைகளை ஒருங்கிணைக்க தனது பிரதிநிதியாக தும்பிச்சி முதலி என்பவரை நிர்ணயித்தார். நிஜாம் பகுதியைச் சேர்ந்த சாதர்கள், விஜயநகர் வம்சத்தவரான ஆனகுந்தி அரசர், ஷோலாப்பூர், ராயதுர்க்கம் ஆகியவற்றின் ஆட்சியாளர்கள் ஆகியோர் புரட்சியாளர்களுக்கு ஆதரவு அளித்தனர்.

**தீபகற்ப கூட்டமைப்பு**

மைசூரிலும் பாஞ்சாலக்குறிச்சியிலும் வெற்றிகண்ட பின்னர் கம்பெனியார் பாளையக்காரர்களின் அதிகாரங்களைப் பறிக்கவும் எதிர்பாளர்களை ஒடுக்கவும் நொடிப்பொழுதும் வீணாக்கவில்லை. இதன் விளைவு அடக்குமுறையாக மாறியது. அடக்குமுறை எழுச்சியைத்தான் தூண்டியது. மருது பாண்டியர் தலைமையில் இராமநாதபுரம் சீமையிலும், கோபால நாயக்கர் தலைமையில் திண்டுகல்லிலும் கூட்டிணைவுகள் வலுப் பெற்றன. கன்னட தேசதத்தில் தூண்டாசியும் கிருஷ்ணப்ப நாயக்கரும், மலபாரில் கேரளவர்மனும் புரட்சித் தலைவர்களாக விளங்கிக் கூட்டிணைவுகளை உருவாக்கிக் கம்பெனி ஆதிக்கத்தை எதிர்த்தனர். அந்தக் கூட்டமைப்பின் முன்னனியில் மருதுபாண்டியனும் தூண்டாசியும் நின்றனர். இரண்டாம் அணியில் கோபாலநாயக்கரும் காவி சாகானும் கேரளவர்மனும் கிருஷ்ணப்ப நாயக்கரும் இருந்தனர். விருப்பாட்சி ஆலோசனை முகாமாக விளங்கியது.

ஒவ்வொரு பிரதேசத்திலும் உள்ள விடுதலை இயக்கப்பணி அவ்வவ்விடத்துத் தலைவனிடத்தில் விடப்பட்டது. அதன்படி மதுரையில் மருது பாண்டியனும், திண்டுக்கல்லிலும், திருச்சியிலும் கோபால நாயக்கரும், கோயமுத்தூரிலும், சேலத்திலும் கானிசாகனும், மலபாரில் கேரளவர்மனும், மைசூரின் மேற்கில் கிருஷ்ணப்ப நாயக்கரும், கன்னடத்தின் வடக்கிலும் அதற்கு அப்பாலும் தூண்டாசியும் விடுதலைப் பணியின் பொறுப்பை ஏற்றனர். காளையார்கோவில் போர்கருவிகளின் கிடங்காக மாறியது காளையார்கோவில் காடுகள் புரட்சி வீரர்களால் நிரம்பியது பஞ்சம் நிரம்பியிருந்த அந்த காலத்தில் உணவு பொருட்களும் பிறவும்

தொண்டித் துறைமுகம் வழியாக வந்திறங்கின. இப்பணிகள் அனைத்தையும் வெள்ளை மருது (மருது பாண்டியனின் உடன்பிறப்பு) கண்காணித்தார். இராமநாதப்புரத்தில் முத்துகரப்பனையும், தஞ்சையில் ஞானமுத்துவையும் அவருடைய தளபதியாக அமர்தினார்.

**பழனிச் சதித்திட்டம்**

1800-ஆம் ஆண்டு ஏப்ரல் 29ம் நாள் எதிர்ப்புப் படையினர் நமது செயல்திட்டத்தை வகுப்பதற்காக கூடினர். பழனி சதித்திட்டம் எனப்படும் இக்கூட்டத்தில் புரட்சிபணியின் தலைவர்களும் அவர்களது உதவியாளர்களும் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்திற்கு கோபால நாயக்கர் தலைமை வகித்தார். 1800 ஜீன் 3ம் நாள் கோயமுத்தூர் கோட்டையைத் தாக்குவதென்றும் ஆங்கிலேய குதிரைப் படையின் ஐந்தாவது படை வகுப்பினை முற்றிலும் அளப்பதென்றும், நாடு முழுவதும் ஆங்கிலேயருக்கு எதிரான கிளர்சியை வெடிக்கச் செய்வதற்கு இதுவே குறியீடாக இருக்கும் என்றும் இக்கூட்டம் முடிவு செய்தது. எல்லா இடங்களிலும் ஒரே காலத்தில் திகைக்க வைக்கும் தாக்குதல் நடத்துதல் இணைப்புத் தொடராக விளங்கும் கோயமுத்தூர் மீது படையெடுத்துக் கைப்பற்றுதல் என்று முடிவு எடுத்தனர். கோயமுத்தூர் முற்றுகையைத் திண்டுக்கல் படை நடத்துதல் அதற்கு துணையாக 4,000 குதிரைப் வீரர்களை கானிசாகான் குசல்குடி கணவாய்வழ கொண்டு சேர்ப்பது தூண்டாசி தமிழகத்துத் தலைவர்களுக்கு குதிரைப் படையை கோயமுத்தூரில் நிலைப்பெற்றிருந்த ஆங்கிலப்படையில் பண்டிகையின் முடிவுநாளாகிய 3.6.1800 இரவில் கோயமுத்தூரை முற்றுகையிடுதல் என்ற முடிவெடுத்துப் பிரிந்தனர்.

**எதிர்பாராத திருப்பம்**

தென்னகத்தில் புரட்சிகளை சூடேறிக் கொண்டிருந்ததை கம்பெனியார் உணர்தனர். மலபாரில் இருந்த அமைதியின்மையும், கன்னடத்தின் நிலைமையும் கம்பெனியாரின் அச்சத்தைத் தூண்டின. கன்னடத்தின் பெல்லம் வழியாக ஆங்கிலேயர் அனுப்பிய படை பயிர்களை அழித்தும், காடுகளைக் கொளுத்தியும் முன்னேறியது. பதுங்கிக் கிடந்த புரட்சிவீரர்கள் கொதித்தெழுந்தனர். உணர்ச்சியும் வீரமும் மிக்க கன்னடத் தலைவர்கள் கிருட்டிணப்ப நாயக்கரும், தூண்டாசியும் திட்டமிட்ட காலத்துக்கு முன் ஏப்ரல் துவக்கத்திலே போருக்கு இழுக்கப்பட்டனர் திட்டம் தடம் புரண்டது.

**கோயமுத்தூர் முற்றுகையின் தோல்வி**

கி.பி 1800 ஏப்ரல் மாதம் கோபால நாயக்கர் தலைமையின் இறுதி கட்டப் போருக்கு திட்டமிட்டனர். கி.பி.1800 ஜீன் மாதம் கோவையிலுள்ள ஆங்கிலேயரின் ராணுவ முகாமை நாலாபுறமும் இருந்து ஒரே சமயத்தில் தாக்குவது என முடிவெடுத்தனர். அதன்படி ஒசூர் புட்டா முகமது இச்சாபட்டி ராமனுல்லாகான். ஒசூர் முஹமது ஹாசன், பரமத்தி அப்பாவு மற்றும் சேசையா ஆகியோர் தளபதிகளாக இருப்பது எனவும் முடிவெடுத்தனர். தமிழகத்துக் கூட்டமைப்பாளர்கள் திட்டப்படி 3.6.1800-ல் கோயமுத்தூரை முற்றுகையிட ஆயத்தமானர்கள். மே மாதத்திலேயே வீரர்களில் ஒரு பகுதியினர் சாதாரணவேடத்தில் முன்னேறி முக்கியவிடங்களில் நிலைகொண்டனர். துரதிஸ்ட்டவசமாக புரட்சிநாளைக்கு முன் கோயமுத்தூர் முற்றுகை பற்றிய செய்தி ஆங்கிலேயர்களுக்கு எட்டியது. அவர்களுடைய படை விழிப்படைந்தது. புரட்சி வீரர்கள் காடுகளில் பதுங்கினர். என்றாலும் 42 பேர் கைது செய்யப்பட்டனர் அவர்கள் தாராபுராத்திலும் சத்தியமங்கலத்திலும் கோயமுத்தூரிலும் பிற முக்கியவிடங்கலிலும் தூக்கிலிடப்பட்டனர்.

**தமிழகத்தில் புரட்சிப்புயல்**

கோயமுத்தூர் தோல்வியால் கோபாலநாயக்கர் பின்னடையவில்லை. மலபார் இயக்கம் ஆங்கிலேயரின் வலிமையைச் சோதித்தது. அது கோபாலநாயக்கருக்கு நல்ல வாய்ப்பைக் கொடுத்தது. வரிகொடா இயக்கமும் கச்சேரிகளைத் தாக்கும் இயக்கமும் திண்டுகல்லில்

வெற்றி கண்டு திருச்சியிலும் பரவின. எனவே வேறு வழியின்றி கம்பெனியார் திருநெல்வேலியில் நிலைகொண்டிருந்த படையைத் திண்டுகல்லுக்கு அனுப்பினார்.

திருநெல்வேலியில் நிலைபெற்ற படை வடக்கே திரும்பியதும் பாளையங்கோட்டைச் சிறையில் அடைக்கப்பட்டிருந்த கட்டபொம்மனின் உறவினரும், பிறரும் 15 மாத சிறைவாழ்வுக்குப்பின் சிறையிலிருந்து தப்பி வெளியேறினர். இந்நிகழ்ச்சி ஒரே நாளில் தேசபக்தர்களுக்குப் பெரும் சாதனையையும் கம்பெனிக்கு அதிர்ச்சியையும் விடுதலை இயக்கத்துக்குப் புதுத் திருப்பத்தையும் ஏற்படுத்தியது.

**விருப்பாச்சியும் தெல்லிக்கோட்டையும் விழுந்தன**

கம்பெனிப்படை மலபாரிலும் திருநெல்வேலியிலும் மாட்டிக்கிடந்தபோது விருப்பாச்சி கோபால நாயக்கர் எதிர்பற்று நின்றார். கி.பி.1800 அக்டோபரில் ஆங்கிலப்படை லெப்டினட் கர்னல் இன்னஸ் பெரும் படையுடன் விருப்பாச்சியை முற்றுகையிட்டார். கோபால நாயக்கர் பணிய மறுத்த மும்முனைத் தாக்குதலை எதிர்த்தார். விருப்பாச்சி, இடையக்கோட்டை, வேலூர் ஆகிய பாளையங்களைச் சேர்ந்த மக்களும் ஏனைய பாளையத்தின் போர் வீரர்களும், சத்திரப்பட்டி பாளையத்தின் அரண்மனை முன்பு போர் புரிந்தனர். போரில் கோபால்நாயக்கரின் மூத்த மகன் முத்துவெள்ளைய நாயக்கர் கொல்லப்பட்டார். கோபால் நாயக்கர் தப்பிவிட்டார். விருப்பாட்சியிலிருந்து ஆனமலைப் பகுதிக்குச் சென்று பல பாளையக்காரர்களின் துணையுடன் போராடியும் தோற்றார். அவர் தெல்லிக் கோட்டைவழி ஐநூறு நாட்டில் பதுங்கினார். பரிசின் பேரில் கோபால நாயக்கரும் நண்பர்களும் பிடிப்பட்டனர். கோபால் நாயக்கர் தலைக்கு பரிசாக அந்த காலத்திலேயே 20,000 ரூபாய் என அறிவித்தனர் பணத்திற்காக துரோகிகள் காட்டிக் கொடுத்தனர். கி.பி.1801 செப்டம்பர் மாதத்தில் திண்டுக்கல் ஊருக்கு வெளியே குளக்கரையில் புளிய மரத்தில் தூக்கிலிட்டனர். அந்தக் குளம் கோபலசமுத்திரம் என நகரின் மத்தியில் இன்றுமுள்ளது. அதை தொடர்ந்து கோபால் நாயக்கர் அரண்மனையும், அவரது மனைவிக்காக கட்டிய அந்தப்புரத்தையும் இடித்து தரைமட்டமாக்கினர்.

**முடிவுரை**

ஆங்கிலேயர்களை எதிர்க்க திண்டுக்கல்லில் ஒரு கூட்டமைப்பை உருவாக்கி, ராணி வேலுநாச்சியாருக்கும், ஊமைத்துரைக்கும் போராட்ட காலத்தில் உதவி செய்து, படைவீரர்களை அவர்களுக்கு கொடுத்து உதவியும், கேரளா வர்மா, தூந்தாசிவாக், திப்புசுல்தான் என்று பலரிடமும் இணக்கத்தோடும் இருந்து ஆங்கிலேயர்களை நாட்டைவிட்டு விரட்ட வேண்டும் என்ற ஒரே நோக்கில் பாடுபட்ட திருமலை கோபால சின்னப்ப நாயருக்கு தமிழக அரசின் சார்பில் மணிமண்டபம் கட்டப்பட்டுள்ளது. இது திண்டுக்கல்-பழனி தேசிய நெடுஞ்சாலையில் அமைந்துள்ள இந்த மணிமண்டபம் 69 லட்சம் செலவில் 0.24.0 ஹெக்டேர் பரப்பளவில் அமைந்துள்ளது.

**நூற்பட்டியல்**


1. Madurai Collectrate Records Vol.1196
2. Madurai Collectrate Records Vol.1197
3. Madurai Collectrate Records Vol.1198
4. Burto Stein, Essay on South India, Vikas Publishing House, New Delhi, 1976.
5. David Ludden, Peasant History of south India, New Jercy, 1985.
6. T.R. Mahalingam, South Indian Polity, University of Madras, Madras, 1967.
7. Rajayyan. K.A., History of British Diplomacy in Tanjore, Rao and Raghavan, Mysore, 1969.
8. Rajayyan.K. History of Tamil Nadu 1565-1965, Madurai Publishing House, Madurai 1978.
9. Revathy.G, History of Tamil Nadu, the Palayams, New Delhi, 2005.
10. Sathiyanatha Ayyar.R, Tamilagam in the $17^{th}$ Century, University of Madras, Madras, 1919.

11. K.Rajayyan, South Indian rebellion 1800-1801, The First War of Independence, Raod Rahavan, Mysore, 1971.
12. கமால்.எஸ்.எம், மறவர் சீமை மாவீரன் மயிலப்பன், சர்மிளா பதிப்பகம், இராமநாதபுரம், 2001.
13. சே.ஆ.கிருஷ்ணமுர்த்தி, விடுதலை வேள்வியின் விருதுகள், மகாலெட்சுமி பதிப்பகம், வேலுார், 2001.
14. தமிழ்வாணன், கட்டபொம்மன் கொள்ளைகாரன், மணிமேகலைப் பிரசுரம், சென்னை, 1965.